நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CC. No. 610/2025

## P.W.1 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | மணிமேகலன் |
| தந்தை / கணவர் பெயர் | : | மாணிக்கம் |
| கிராமம் | : | கோனூர் கிழக்கு |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW1** |
| வயது | : | 61 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், பிப்ரவரி மாதம், 05–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 12.50PM

1. நான் நங்கவள்ளி காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து 30.09.2025 ம் வருடம் பணி ஓய்வு பெற்றுவிட்டேன்.02.10.2024 ம் தேதி 17.00 மணியளவில் நங்கவள்ளி காவல் நிலைய உதவி ஆய்வாளர் ரவிக்குமார், சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் அழகேசன் மற்றும் நானும்

மதுவிலக்கு குற்றத்தடுப்பு வேலையாக பெரியசோரகை கிராமம் கள்ளியூர் பகுதியில் கண்காணிப்புக்காக சென்றபோது எதிரி கோபால், த.பெ. ஆறுமுகம் என்பவர் அவரது வீட்டின் அருகே ஓடமுயன்றவரை சுற்றி வளைத்து பிடித்தோம்.

2. அவரை விசாரிக்க அவர் அரசு அனுமதியின்றி அரசு மதுபானத்தை அதிக விலைக்கு விற்பனை செய்ய வைத்திருப்பதாக ஒப்புக்கொண்டார். அவரை கைதுசெய்தும் அவர் காட்டிய இடத்தை சோதனை செய்து பார்க்க 180 ml அளவுக்கொண்ட Black Pearl 1 பாட்டில், MCLENE மெக்லேண்ட் பிராந்தி 3 பாட்டில் இருந்தது. கைப்பற்றுதல் மகசரிலுள்ள 1 வது கையெழுத்து என்னுடையதுதான். (**கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** )

3. மேற்படி அந்த 180 ml அளவுக்கொண்ட Black Pearl 1 பாட்டில், MCLENE மெக்லேண்ட் பிராந்தி 3 பாட்டில்களை சாட்சிகளாகிய சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் மற்றும் என் முன்னிலையில் காவல் உதவி ஆய்வாளர் ரவிக்குமார் அவர்கள் கைப்பற்றி பின்பு எதிரியையும் கைப்பற்றிய பாட்டில்களையும் காலை 18.00 மணிக்கு நிலையம் அழைத்துவந்து திரேக பரிசோதனைக்கு உட்படுத்தி பாரா காவல் வசம் ஒப்படைத்தோம்.

4. இந்த வழக்கில் நான் உதவி ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். எதிரியை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்லமுடியும். அவர் இன்று நீதிமன்றத்தில் ஆஜரில் இல்லை. ஆஜர் எதிரியிடம் இருந்து தான் அரசு மதுப்பாட்டில் கைப்பற்றப்பட்டது. உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. இந்த சம்பவம் தொடர்பாக இரகசிய தகவல் காவல் உதவி ஆய்வாளருக்கு கிடைக்கபெற்றது. அந்த இரகசிய தகவல் எத்தனை மணிக்கு வந்தது என்று எனக்கு தெரியாது. நாங்கள் சம்பவயிடத்திற்கு போகும்போது எதிரி வீட்டில்தான் இருந்தார். எதிரியின் வீடு ஓட்டுவீடாகும். எதிரியின் வீட்டில் எதிரியும் அவரது மனைவியும் இருந்தார்கள். அவரது வீட்டில் எத்தனை நபர்கள் என்று தெரியாது.

2. பாட்டில்கள் வீட்டிற்கு வெளியே சுவற்றின் ஓரமாக வைக்கப்பட்டிருந்தது. எதிரியின் வீட்டில் வடக்குப்பக்க சுவரையொட்டி மதுபான பாட்டில்கள் எடுக்கப்பட்டது. துணிப்பையில் மதுபான பாட்டில்களை வைத்திருந்தார். அந்த துணிப்பையை நாங்கள் கைப்பற்றவில்லை.

3. எதிரியின் வீட்டிற்கு பக்கத்தில் வீடுகள் எதுவும் இல்லை. எதிரியின் வீட்டிற்கு எதிர்புறம் 2-3 வீடுகள் இருந்தது. யார்யார் வீடுகள் என்று தெரியாது. நாங்கள் சம்பவயிடத்திற்கு போகும்போது எதிரியிடம் மதுப்பாட்டில் வாங்குவதற்காக யாரும் காத்திருக்கவில்லை. எதிரி என்ன விலைக்கு வாங்கி என்ன விலைக்கு விற்பனை செய்கிறார் என்று எனக்கு தெரியாது.

4. கைப்பற்றுதல் மகசரில் தனிப்பட்ட பொதுமக்கள் யாரும் சாட்சி கையொப்பம் செய்யவில்லை. நாங்கள் வந்திருப்பதை பார்த்து பொதுமக்கள் யாரும் அந்த இடத்திற்கு வரவில்லை. சம்பவயிடத்தில் நாங்கள் ½ மணிநேரம் இருந்தோம். சம்பவயிடத்திலிருந்து நாங்கள் நிலையம் கிளம்பும்போது 18.00 மணியிருக்கும்.

5. கைப்பற்றிய மதுபாட்டில்களை நிலைய பாரா காவலர் வசம் ஒப்படைத்துவிட்டோம். அந்த மதுபாட்டில்களை அழித்துவிட்டார்களா அல்லது நீதிமன்றத்தில் ஒப்படைத்தார்களா என்பது பற்றி எனக்கு தெரியாது. எதிரி மதுபாட்டில்கள் விற்பனை செய்வது சம்மந்தமாக காவல் நிலையத்திற்கு யாரும் புகார் கொடுக்கவில்லை. கைப்பற்றப்பட்ட மதுபாட்டில்களை ஆய்விற்கு அனுப்பி வைத்தார்களா என்றால் அதுப்பற்றி தெரியாது.

6. நான் சொன்னவாறு எதிரி மதுபாட்டில்கள் எதுவும் விற்கவில்லை என்றாலும் புள்ளிவிவரக்கணக்கிற்காக வழக்கு பதிவுசெய்யப்பட்டுள்ளது என்றாலும் நாங்கள் சம்பவயிடத்தில் மதுபாட்டில்களை கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. எதிரி அரசு மதுபாட்டில்களை விற்பனை செய்யவில்லை என்றாலும் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லையென்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:- 01.00 PM

மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.

ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்
நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.